ஸ்ரீ மீனாட்சி பஞ்சரத்னம்

Q25:417
N32
170102

ஆவணக்காப்பக
170102
சென்னை-600 008
O25:417
N32

## குறிப்பு.

இந்நூலாசிரியர் இடதுகை வாதக்கடுப்பால் வருந்திய காலத்தில் இந்நூல் பாடப்பெற்றது.

2575

61

உ

சிவமயம்.

# ஸ்ரீ மீனாட்சியம்பிகை மாலை.

4 - APR 1932

மதுரை.

ஸெயின்டு மேரிஸ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்

மூ. கோவிந்தசாமி ஐயரால்

இயற்றப்பெற்றது.

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1932.

Q25:417
.N132
170102

உ

சிவமயம்.

# ஸ்ரீ மீனாட்சியம்பிகை மாலை.

4 - APR 193

மதுரை,
ஸெயின்டு மேரிஸ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
மு. கோவிந்தசாமி ஐயரால்
இயற்றப்பெற்றது.

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப் பெற்றது.
1932.

9B
2-193

பண்டிதர்கள் சொன்னகடும் பத்தியங்கள் கைக்கொண்டேன்
கண்டிலனோர் நற்பயனுங் காய மிளைத்தயர்ந்தேன்
மண்டியவெவ் வாத வலியதனை மாற்றுவிப்பாய்
விண்டுமெகிழ் தங்கையா மீனாட்சி யம்பிகையே. (4)

தேவியுனை யல்லாமலோர் தெய்வமில்லை யென்றுன்னை
நாவியலு மட்டு நவின்றுதொழு தேத்தியுநீ
மேவியவென் கைக்கடுப்பை விட்டகலச் செய்யாயோ
மீவளரு மார்ண்புடைய மீனாட்சி யம்பிகையே. (5)

அன்னமில்லை சற்று மயர்ந்த வுறக்கமில்லை
பன்னரிய வேதனையாற் பாடெல்லாம் பட்டயர்ந்தே
னின்னருணீ செய்யாயே லென்னாகு மென்கதியு
மின்னவிரும் பூணாரு மீனாட்சி யம்பிகையே. (6)

வாதமென வேசிலரும் வாயுவென வேசிலரு
மோதியதற் குற்றமருந் தெல்லா முதவினரா
லேதுங் குணமில்லை யின்னருணீ செய்வாயேல்
வேதனையுந் தீருமன்றோ மீனாட்சி யம்பிகையே. (7)

என்றே யருள்புரிவா யென்றே யருள்புரிவா
யென்றே கலங்கிமன மெய்த்தேன் பரதேவி
யின்றே கரக்கடுப்பை நீக்கிடுவா யெண்டிசையும்
வென்றே மதுரையையாள் மீனாட்சி யம்பிகையே. (8)

பொல்லாத சேயாய்ப் பொருந்திடினும் பூவுலகி
னல்லா யவனைப் புறக்கணித்த லன்றாமோ
நில்லாத கைக்கடுப்பை நீக்கியருள் செய்திடுவாய்
வில்லாரு நெற்றிகொளு மீனாட்சி யம்பிகையே. (

# ஸ்ரீ மீனாக்ஷி யம்பிகை மாலை.

-600 00
170025
Q25'417
N132

நெஞ்சார வோர்பிழையு நேர்ந்தறியே னேதிலே
நஞ்சாரு மிக்கொடுநோய் நண்ணியதோ நானறியேன்
பஞ்சா யதுபறக்கக் கண்பார்ப்பாய் பைங்கழையின்
வெஞ்சா யகமேந்து மீனாட்சி யம்பிகையே. (10)

தொந்தமிகு நோயின் றுயர்பொறுக்க மாட்டாம
லெந்தவித மென்னுயிரைப் போக்கிடலா மென்றிருந்தே
னந்தவினை யாகாத தாகுமென விட்டொழித்தேன்
வெந்துயரந் தீர்த்தருள்வாய் மீனாட்சி யம்பிகையே. (11)

நாடிநரம் பெல்லா நடுநடுக்க மெய்திமிக
வாடியயர் வுற்றேன் மலைமகளே கண்பார்ப்பாய்
தேடிவரு வோர்களுக்குச் சித்தியெலாந் தந்துபர
வீடிசையக் கொடுத்தருளு மீனாட்சி யம்பிகையே. (12)

பாரிலிரு கையூன்றி நின்னைப் பணிவதற்குச்
சீரியலு மில்லாமற் சிந்தை கவல்கின்றே
ஞரியலார் தாயே நலியா தெனைப்பாள்வாய்
வேரிமலர்க் கூந்தலுடை மீனாட்சி யம்பிகையே. (13)

ஆடை புனைவதற்கு மாற்று தயர்கின்றேன்
பீடை சிலநாளுக் கென்றவர்கள் பேச்செல்லா
மோடை தனிலெழுதும் வாசகத்தை யொத்ததுபூ
மேடைமலி மாமதுரை மீனாட்சி யம்பிகையே. (14)

நீரோடு தற்கும் பிறர்துணையை நேடிநின்று
லாராலே யாகு மடர்பிணியைத் தாங்குதற்கே
யோராறு பேத சமயங்கட் குற்றதொரு
வேராக நின்றிலகு மீனாட்சி யம்பிகையே. (15)

தூக்கமிலா தெத்தனைநா ளேனோபாற் றுயர்ப்படுவேன்
றூக்கியுப யோகமுறக் கையின் சுகம்பெற்றே
யாக்கமுட னேயுற்ற வாழ்வு மமைதபவே
மீக்கொளுநா ளெந்நாளோ மீனாட்சி யம்பிகையே. (16)

பூவுடைய தட்டேந்திப் பூசைசெயத் தான்புறத்து
நோவதனை யென்றொழிப்பாய் றாலே யிடையுடையாய்
தேவியுனைச் சத்தியெனத் தேர்ந்துரைப்பார் நோய்தீர்க்க
மேவுசத்தி நிற்கிலையோ மீனாட்சி யம்பிகையே. (17)

பற்பமொடு சிந்தூரம் பச்சிலைக ஷாயவகை
யற்புதசீ வாமிருதங் கீரபலை யாதியவை
பற்பலநா ளுண்டேன் பலனில்லை நீயருள்வாய்
விற்பனரை யாதரிக்கு மீனாட்சி யம்பிகையே. (18)

பொய்யா வெழிற்பெருக்கப் புத்தகத்தைச் சீராகக்
கையார வேந்திவெள்ளி தோறுங் கழறிவந்தேன்
வெய்யாருங் கைக்கடுப்பால் விட்டிட்டே னென்செய்வேன்
மெய்யாரும் போதருளை மீனாட்சி யம்பிகையே. (19)

இன்னருள்செ யொன்பா னிரவிலுன தாலயமுந்
துன்னியுனை யாண்டுதொறு மன்பாய்த் தொழுதுவந்தே
னின்னலிழை கைக்கடுப்பா லிவ்வருட மேலாமன்
மின்னிடையே நின்றயர்ந்தேன் மீனாட்சி யம்பிகையே. (20)

போகாத நோயெல்லாம் போக்கவல நீயெனது
வாகாரு நோய்தீர்த்து வைக்கமனங் கொள்ளத்தா
னாகாதோ துன்பமெனு மாழியிடை வீழ்ந்தாரை
மீகாமன் போற்காக்கு மீனாட்சி யம்பிகையே. (21)

சித்த மிளகிநிதஞ் செய்யுமனுட் டானமெலாம்
பத்தி லொருபங்கும் பண்புடனே செய்வதற்கோ
வத்த மிகக்கடுக்கு மங்தோயா னென்செய்வேன்
வித்தகரெல் லாம்புகழு மீட்சி யம்பிகையே. (22)

பூதியெடுத் தங்கமெலாம் பூசக்கை நீளாமல்
வேதனையே தந்துளது மெய்யணிய வாற்றுமற்
காதலொடு நெற்றிமட்டுங் கையொன்றுற் பூசினன்மெய்
மீதணியச் செய்யாயோ மீனுட்சி யம்பிகையே. (23)

உற்றவொரு கையு முழம்போடு மோவெனவே
சொற்றபடி கையொன்றாற் றூக்கியெது செய்திடலா
மற்றுமொரு கையும் வழங்கிடவே செய்தருள்வாய்
வெற்றிமுரா சார்மதுரை மீனுட்சி யம்பிகையே. (24)

சென்னியிரு கையினையுஞ் சேர்த்து வணங்குவது
சொன்னமுறை யாமிடக்கை தூக்குதற்கோ வேலவில்லை
யென்னசெய்வேன் மாதாவே யென்றருள்வா யன்னமஞ்சு
மென்னடைகொள் மாமதுரை மீனுட்சி யம்பிகையே. (25)

ஈயப் புகுவோரை யென்னிடது கையாலே
போயப் பொருளைப் புறத்தே தடுத்தேனே
வேயப் படுபிணியை யில்லாமற் செய்தருள்வாய்
வேயைப் பொருதோளி மீனுட்சி யம்பிகையே. (26)

கண்ணுதலார் நீறதனைக் கையொன்றால் வாங்கியதைப்
பண்ணுறவே பூசாது பாருதிர்த்த பாவத்தாற்
றிண்ணுறவே யிந்நோயுஞ் சேர்ந்ததுவோ வென்செய்வேன்
விண்ணுளவா னோர்புகழு மீனுட்சி யம்பிகையே. (27)

ஐயமதை யேற்போரை யக்கிரமம் பேசியிடக்
கையதனா லோட்டிக் கடிந்தேனே வேதாலே
வெய்யதுயர் செய்யுமிந்த நோயும் விளைந்ததுவோ
மெய்யறிவோர் கொண்டாடு மீனாட்சி யம்பிகையே. (28)

பற்றுகளை முற்றறுத்த பண்புடைய தூயோருக்
குற்றவிடக் கையாலே யோர்பொருளை யீந்தேனே
மற்றதனா லிந்நோயும் வந்தடுத்த தோவிறகு
விற்றவரன் பங்கிலுறை மீனாட்சி யம்பிகையே. (29)

ஏதுகுணம் பற்றி யிருந்தாலு மேழையெனைச்
சோதனையே செய்யாமற் றுன்புறுத்துங் கைக்கடுப்பை
மாதரசி யுன்னையல்லான் மற்றெவரே மாற்றுவரென்
வேதனைதீர்த் தாண்டருள்வாய் மீனாட்சி யம்பிகையே. (30)

ஊழின் றிடத்தாலே யுற்றதுவென் றாலுமதைப்
பூழியர்கோன் மாமகளே போக்குதிற னுண்டுனக்கே
வாழிமறை யாகமங்கள் வாழிசிவ சின்னங்கள்
வாழியருள் மீனாட்சி யம்பிகையும் வாழியவே. (31)

ஸ்ரீ மீனாட்சி யம்பிகை மாலை
முற்றிற்று.

சென்னை-600 008
170102